(**CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE**)
**IN THE COURT OF THE I ADDL.DIST. & SESSIONS COURT, MADURAI.**
**DEPOSITION OF WITNESS FOR PROSECUTION / DEFENCE**
**SESSIONS CASE NO**.112/2019 **P.W** - 1

Name : சுந்தரி
Father's name :
Village :
Taluk :
Caste :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 20-09-2021.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது மேலப்பொன்னகரம் 6 வது தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் டெய்லர் வேலை பார்க்கிறேன். மல்லிகா என்பவர் என்னிடம் துணி தைத்த வகையில் தெரியும். கடந்த 16.06.2018 ல் மதியம் 3 மணியளவில் மழை பெய்து கொண்டிருந்தது. அப்போது ஆர்.வி.நகர் 2 வது தெருவில் இருந்த மல்லிகா வீட்டிற்கு நான் குடை வாங்க சென்றேன். அப்போது மல்லிகா மகன் சார்வகன் பாட்டியிடம் குடை வாங்கி தருவதாக சொன்னான். அப்போது பாட்டி கட்டிலில் இருந்து கீழே விழுந்து கிடந்தது. அவருடைய மண்டையில் இருந்து இரத்தமாக இருந்தது. அன்று ரம்ஜான் ஆக இருந்தது. அவரை ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்ல வெளியில் இருந்த நான்குபசங்களும் சேர்ந்து 100 க்கு போன் செய்தோம். போலிசாரும் வந்துவிட்டார்கள். வீட்டின் கதவு நான் பார்க்கும் போது பூட்டப்பட்டிருந்தது. சாவி பக்கத்தில் இருந்தது. நாங்கள் அனைவரும் சேர்ந்து கதவைத் திறந்தோம். அப்போது உடனிருந்த பையன்கள் பெயர் எனக்குத் தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி விசாரணை செய்ய அரசுதரப்பில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது சாட்சி மேற்கொண்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும் போலிஸ்

விசாரணையில் கடந்த 16.06.2018 ஆம் தேதி நானும், என் மகளும் வேறு ஒரு வேலையாக சென்று விட்டு வரும் வழியில் மழை பெய்த காரணத்தினால் ஏற்கனவே ஜாக்கெட் தைத்து கொடுப்பதில் பழக்கமான மல்லிகா என்பவரது வீட்டிற்கு சென்று குடையை வாங்கி கொண்டு செல்லலாம் என்று அவருடைய வீட்டிற்கு சென்றதாக சொன்னேன். அப்போது சார்வாகனைப் பார்த்து அம்மா இல்லையா குடை வேண்டுமென்று போலிசார் விசாரணையில் சொன்னேன். அப்போது சார்வாகன் அம்மா போனில் பேசிவிட்டு வீட்டில் குடை இல்லையாம் பாட்டிவீட்டில் வாங்கி கொடுக்கச் சொன்னார்கள் என்று சொன்னான். அப்போது சார்வாகன் பாடடி வீட்டிற்கு சென்று பாட்டியை அழைத்தான். நானும், என் மகளும் கேட் அருகில் நின்றுகொண்டோம். அப்போது முருகேசனும் வந்துவிட்டார். சத்தம் போட்டு பாடடியிடம் இருந்து பதில் வராததால் கதவருகில் சென்று எட்டிப் பார்த்தோம். அப்போது மெயின் கதவு பூட்டடப்பட்டிருந்தது. அப்போது சார்வாகனும், முருகேசனும் செல்போன் டார்ச் வெளிச்சத்தில் உள்ளே அடித்துப் பார்த்தார்கள். அப்போது கிழக்கு நோக்கி கையும் மேற்கு நோக்கி கால்களும், அருகில் சிறிய இரத்தத்திட்டோடு பாட்டி விழுந்துகிடந்தார். திரும்பத் திரும்ப பாட்டியை அழைத்தேன். பதில் வரவில்லை. அதனால் பூட்டை உடைக்க வேண்டுமென்று முடிவு எடுத்து முருகேசனும், சார்வாகனும் சுத்தியல் எடுத்து வந்தார்கள். அப்போது கதவு உட்புறமாக பூட்டியிருந்ததால் பூட்டை உடைக்க முடியவில்லை. கட்டிலில் சாவி இருந்ததை பார்த்தோம். அதை ஒரு குச்சியை வைத்து எடுத்து கதவைத் திறந்தோம். எல்லோரும் ோசேர்ரந்து உள்ளே போய் பார்த்த போது பாட்டிக்கு உயில் இருந்தது. அப்போது விஸ்வாவின் நண்பர்கள் கவினும், ஹேமந்தும் வீட்டுவாசலில் நின்று கொண்டிருந்தார்கள். நான் ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்லலாம் என்ற சொானனேன். அப்போது வெளியில்நின்று கொண்டிருந்தேன். அபபோது சார்வாகன் பக்கத்திலுள்ள ஆஸ்பத்திரி டாக்டரை கூபிட்டு வருவதாக சொன்னான். அவன் போய்விட்டு வந்து, அங்கு டாக்டர் இல்லை வேறு ஆஸ்பத்திரிக்கு போக வேண்டுமென்னு

சொன்னான். அந்த நேரத்தில் அங்கு வீட்டு வேலை செய்யும் மீனாட்சிஅம்மாள் வந்தார். அப்போது வேறு ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லல முடியு செய்து ஒரு போர்வையை விரித்து அதில் பாட்டியை திருப்பிய போது அவர் கழுத்தில் கத்தியால் குத்திய காயம் இருந்தது. அதில் உடைந்த கத்தியின் பாகம் இருந்தது. அதை பார்த்து நான் பயந்துவிட்டேன். அப்போது நான் போலிசுக்கு போன் செய்யச் சொன்னேன். சார்வாகன் வெளியில் வந்து போலிசுக்கு போன் செய்தான். அது வரையில் உயிரோடு இருந்த பாட்டி அப்போது இறந்துவிட்டது என்றால் அப்படித்தான் இருக்கும். பாட்டியின் உறவினர்களுக்கு தகவல் சொன்னோமா என்றால் மீனாட்சி சொன்னார். போலிசார் விசாரிக்கும் போது இவ்வாறு நான்சொன்னேன்.

<u>**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**</u>

அன்றைய தேதியில் நான் இரவு 10 மணிவரை பாட்டியின் வீட்டில் இருந்தேன். போலிசார் வரும் போது மாலை 4, 4.30 மணி இருக்கும். சுமார் 4, 5 போலிசார்கள் வந்தார்கள். சப்இன்ஸ்பெக்டர், இன்ஸ்பெக்டர் போன்ற உயரதிகாரிகள் வந்தார்கள். போலிசார் வரும் போது நான், மீனாட்சி, எதிரி, கவின், ஹேமந்த் ஆக மொத்தம் சுமார் 10 பேர்கள் இருந்தோம். போலிசர் வந்ததும் இடத்தை பார்த்து என்னையும், மற்றவர்களையும் தனித்தனியாக விசாரித்தார்கள். அப்படி விசாரித்து வாக்குமூலம் எழுதி என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். அப்போது சார்வாகனும் வாக்குமூலம் கொடுத்தான். போலிசார் அதில் கையெழுத்து வாங்கினார்கள். ஆம்புலன்ஸ் அங்கு வரவில்லை. நான் இருக்கும் போது போலிஸ் மோப்பநாய் வந்தது. போலிஸ் மோப்பநாய் வரும் போதும், இறந்த மாரியம்மாள் பிரேதம் வீட்டிற்குள் தான் இருந்தது. மோப்பநாய் அனைத்தையும் பார்த்துவிட்டு வெளியில் ஓடிவிட்டது. கைரேகை நிபுணர்கள் நான் இருக்கும் போது வந்தார்கள். அங்கிருந்த அனைவரிடமும் ரேகை வாங்கினார்களா என்று எனக்கு ஞாபகமில்லை. நான் அங்கு இருக்கும் போது எதிரியின் அப்பா, அம்மா வந்துவிட்டார்கள். மோப்பநாய் இருக்கும்

போதும், போலிசார் இருக்கும் போதும் அவர்கள் வீட்டில் இருந்தார்கள். இறந்த பாட்டியின் வீட்டுக்கதவு வடக்கு பார்த்து உள்ளது. அதற்கு முன்னால் வீட்டிற்கு முதலில் கிரில்கேட்டும், அதற்கடுத்து மரக்கதவும் உள்ளது என்றால் கிரில் கேட் உள்ளது. மரக்கதவை நான் கவனிக்கவில்லை. கிரில் கேட்டிற்கு அருகில் இரும்புக்கட்டில் இருந்தது. அதற்கு கீழே பாட்டி இருந்தார். நான் பார்க்கும் போது அங்கிருந்த தரை இரத்தக்கறையாக இருந்தது. போர்வையில் வைத்து ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்ல ஏற்பாடு செய்தோம். நான் அன்று என்னுடைய வீட்டிற்கு வர இரவு 11 மணி ஆகிவிட்டது. பாட்டி வீட்டில் வைத்து என்னை போலிசார் விசாரித்த பின்னர், அதற்கு பிறகு விசாரிக்கவில்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்துப்
பார்க்கப்பட்டு/ சாட்சிக்கு வாசித்துக்காண்பித்து அதை
சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்/
கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல்
மாவட்ட நீதிபதி,
மதுரை.

(**CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE**)
**IN THE COURT OF THE I ADDL.DIST. & SESSIONS COURT, MADURAI.**
**DEPOSITION OF WITNESS FOR PROSECUTION / DEFENCE**
**SESSIONS CASE NO.112/2019 P.W - 2**

Name : விஸ்வா
Father's name :
Village :
Taluk :
Caste :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 20-09-2021.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது பெத்தானியாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். அதற்கு முன்பு அரசரடி ஹார்வி நகரில் குடியிருந்தேன். அப்போ என் வீட்டிற்கு அருகில் மாரியம்மாள் பாட்டி வீடு இருந்தது. கடந்த 16.06.2018 ஆம் தேதி நானும் என் நண்பர் ஹேமந்த்குமாரும் மில்காலனியில் உள்ள சேக்அல்டாப்உசேன் என்ற நண்பர் வீட்டில் ரம்ஜானுக்காக சாப்பிட்டுவிட்டு எங்கள் வீட்டிற்கு ஜெயில் ரோடு வழியாக ஹார்விநகருக்கு நடந்து வந்து கொண்டிருந்த போது ஹேமந்த் கவின் என்பவருக்கு போன் செய்து என்னுடைய வீட்டிற்கு வரச் சொன்னான். நாங்கள் மூவரும் எங்கள் வீட்டில் வைத்து டி.வி. பார்த்துக் கொண்டிருந்தோம். ஒரு ஐந்து நிமிடம் ஆகியிருக்கும். அப்போது சார்வாகன் அங்கு வந்து பாட்டி கீழே விழுந்துவிட்டார் வாங்க என்று கூப்பிட்டார். நாங்கள் மூவரும் போய் பார்த்த போது மாரியம்மாள் வீடு உள்பக்கமாக பூட்டப்பட்டிருந்தது. சாவியை பார்த்தோம் கிடைக்கவில்லை. வீட்டில் இருந்து சுத்தியலை எடுத்து வந்து பூட்டை உடைக்கப் பார்ததோம். அதற்குள் சார்வாகன் சாவியை பார்ததுவிட்டார். ஒரு கம்பு மூலம் சாவியை எடுத்து பூட்டை திறந்தான். அங்கு போய் பார்த்த போது பாட்டியின் கழுத்தில் கத்தியால் காயமும், உடைந்த கத்தியும் இருந்தது. அதன்பிறகு போலிசார் வந்தார்கள். அப்போது வீட்டிற்கு வெளியே நான், ஹேமந்த், கவின், சார்வாகன் இருந்தோம். அ.சா.1

அங்கிருந்தாரா என்று எனக்கு ஞாபகமில்லை. போலிசுக்கு சார்வாகன் வீட்டில் இருந்த உறவினர் யாரோ போன் செய்தார்கள். இதுசம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

நான், என் நண்பர்கள் ஹேமந்த், கவின் 16 ஆம் தேதி 3 மணிக்கு என் வீட்டிற்கு வந்தோம். நாங்கள் குடியிருக்கும் வீடு இறந்து போன மாரியம்மாளுக்கு சொந்தமான வீடு ஆகும். நாங்கள் குடியிருந்த வீடு மாரியம்மாளுக்கு சொந்தமான பெரியவீடு ஆகும். எங்களுடைய வீடு தரைதளத்தில் தெற்குபார்த்த வாசல் உள்ள வீடு ஆகும். என்வீட்டிற்கு நேர் எதிரில் வடக்கு பார்த்து மாரியம்மாள் மற்றும் எதிரி சார்வாகன் வீடு இருந்தது. என் வீட்டிற்கு பின்புறம் வடக்கு பார்த்து ரீகோ இந்தியா என்ற கம்பெனியின் குடோன் இருந்தது. அந்த குடோனை ஒட்டி கிழக்குப் பக்கம் கெவின் மார்க்கெட்டிங் குடோன் இருந்தது. என் வீட்டு மாடியில் ஐ.டி.எப்.சி. பாரத் பேங்க் அலுவலகம் இருந்தது. நாங்கள் குடியிருந்த வீட்டின் வடக்குப்பக்கம் மெயின்ரோட்டில் மேற்குப்பக்கம் 10 அடி அகலமுள்ள பெரிய இரும்புகேட் இருந்தது. அந்த கேட்டிற்கும், அந்த கேட்டில் இருந்து உள்ளே வருவதற்கு என் வீட்டிற்கு மேற்கே காம்பவுண்டில் இருந்து 15 அடி அகல பாதை உள்ளது என்றால் சரிதான். என்வீட்டிற்கும், மற்றும் எதிரிலுள்ள மாரியம்மாள், சார்வாகனம் வீட்டிற்கும் இடையில் சுமார் 4 அடி அகல இடைவெளி இருந்தது. எங்கள் வீட்டில் முதலில் கிரில்கேட்டும், அதற்கடுத்து மரக்கதவும் இருந்தது. அதே போன்றுதான் மாரியம்மாள் மற்றும் சார்வாகன் வீட்டில் முதலில் கிரில்கேட்டும், அதற்கடுத்து மரக்கதவும் உள்ளது. என் வீட்டின் மரக்கவு மற்றும் கிரில் கேட்டு திறந்திருந்தால் உள்ளேயிருந்து எதிரில் உள்ள இரண்டு பேர் வீட்டிற்குள்ளும் பார்க்க முடியும். என் அம்மா இறந்துவிட்டார். என் அப்பா பேட்டரி கடை வைத்துள்ளார். 16 ஆம் தேதி என் அப்பா கடைக்கு போய்விட்டார். எனக்கும், என் அப்பாவிற்கும் என் வீட்டில் சமையல் செய்து கொடுக்க பொதும்பில் இருந்து மீனாட்சி என்ற ஒரு நபர்

தினமும் வந்த சமையல் செய்து கொடுப்பார். அந்த மீனாட்சி மாடியில் இருக்கும் பேங்கில் வேலை பார்க்கும் ஊழியர்களுக்கும் டீ, காபி போன்றவை வாங்கி கொடுப்பார். நான் அந்த வீட்டில் சுமார் ஒரு வருடம் குடியிருந்தேன். நான் இறந்து போன மாரியம்மளுக்கு அவ்வப்போது தேவைப்படும் போது டீ, காபி போன்றவை கொடுப்பது வழக்கம். 16 ஆம் தேதி எங்கள் வீட்டில் வேலை பார்த்த மீனாட்சி வேலைக்கு வரவில்லை. நான் 16 ஆம் தேதி காலையில் என் வீட்டில் சாப்பிடவில்லை. நண்பர் வீட்டிற்கு போய்விட்டேன். நண்பர் வீட்டில் இருந்து திரும்பி என் நண்பர்களுடன் என் வீட்டிற்கு வந்த பின்னர் அன்று சுமார் 3.30 மணியளவில் மீனாட்சியைப் பார்த்தேன். நண்பர் வீட்டிற்கு நான் விருந்துக்கு சென்றுவிட்டு வரும் போது என்வீடு பூட்டப்பட்டுதான் இருந்தது. என் வீட்டு சாவி இறந்து போன மாரியம்மாள் வீட்டின் கிரில் கேட்டு கொக்கியில் மாட்டப்பட்டிருந்தது. அங்கிருந்து சாவியை எடுத்துதான் என் வீட்டை திறந்து நானும், என் நண்பர்களும் என் வீட்டிற்கு போய் டி.வி பார்த்தோம். அந்த கொக்கி கிரில் கேட்டின் உள்ளே இருந்தது. மாரியம்மாள் வீட்டு சாவி கட்டில் மேலே இருந்தது. நான் என் வீட்டு சாவியை எடுக்கச் சென்ற போது கட்டில் ஒரு அடி தூரத்தில் இருந்தது. சார்வாகன் பூட்டை திறக்க முடியவில்லை, சுத்தியலை எடுத்துவாருங்கள் என்று சொன்ன பிறகு என் வீட்டில் இருந்த சுத்தியலை நானும், என் நண்பர்களும் எடுத்துக் கொண்டு சென்றோம். பூட்டை திறக்க முடியாததால் வெளியில் இருந்து குச்சியை வைத்து சாவியை எடுப்போம் என்று சொன்னேன். அந்த சாவியை எடுக்கும் போது நான், என் நண்பர்கள், சார்வாகன், மீனாட்சி, மற்றும் சுந்தரி ஆகியோர்கள் அங்கு இருந்தோம். எங்கள் வீட்டில் வேலை பார்த்த மீனாட்சி இறந்து போன மாரியம்மாளிடம் நெருங்கி பழகும் என்றால் சரிதான். இறந்து போன மாரியம்மாள் காதில் தோடும், கையில் வளையலும் போட்டிருப்பார். வீட்டிற்குள் சென்ற பின்னர் மாரியம்மாள் போட்டிருந்த தோடு மற்றும் வளையல்களை மீனாட்சி கழுவி ஒருசிறிய சில்வர் பாத்திரத்தில் போட்டு வைத்தார். சுமார் 4 மணியளவில்

கரிமேடு போலிசார் அங்கு வந்தார்கள். சுமார் 10 பேர்கள் வந்தார்கள். அவர்கள் வந்து அந்த இடம் முழுவதையும் பார்த்தார்கள். என்னையும் விசாரித்து கையெழுத்து வாங்கினார்கள். போலிசார் மீனாட்சி, அ.சா.1 மற்றும் சார்வாகனையும் விசாரித்து கையெழுத்து வாங்கினார்கள். அப்போது மீனாட்சி எடுத்து பத்திரப்படுத்தி வைத்திருந்த நகைகளை போலிசாரிடம் கொடுத்தார். அங்கு போலிசார் மாலை சுமார் 6 மணி வரை இருந்தார்கள். இறந்து போன மாரியம்மாளின் மகள் ஆண்டாளை எனக்குத் தெரியாது. மேற்படி ஆண்டாளின் மகன் மற்றும் மகள் யாரென்று எனக்குத் தெரியாது. நான் ஆண்டாளின் இளையமகனுக்கு செல்போன் மூலம் தகவல் சொல்லவில்லை. நான் மீனாட்சி ம்றறும் அங்கு இருந்தவர்களிடம் ஆண்டாளின் செல்போன் நம்பரை கேட்கவில்லை. அன்றைய தேதியிலேயே என்னையும், எதிரி சார்வாகனையும் அவர் அப்பாவையும், என் நண்பர்களையும் போலிசார் விசாரிக்க வேண்டுமென்று போலிஸ்ஸ்டேசன் அழைத்துச் சென்றார்கள். அன்று இரவு முழுவதும் வைத்திருந்து விட்டு காலையில் எங்களிடம் கூப்பிடும் போது வரவேண்டும் என்று சொல்லி அனுப்பிவிட்டார்கள். மீண்டும் 19ஆம் தேதி என்னையும், என் நண்பர்கள் ஹேமந்த், கவின், சார்வாகன் மற்றும் அவரது அப்பாவையும் விசாரணைக்கு வரச் சொன்னார்கள். அன்று காலை சுமார் 10 மணிக்கு காவல்நிலையம் சென்றோம். அன்று இரவு சுமார் 7 மணிவரை காவல்நிலையத்தில் இருந்தோம். என்னையும் என் நண்பர்களையும் போகச் சொல்லிவட்டு சார்வாகனை மட்டும் காவல்நிலையத்தில் இருக்கச் சொன்னார்கள். சார்வாகன் அப்போது சென்னையில் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தார். அதே கல்லூரியில் என் நண்பர் கவினும் படித்துக் கொண்டிருந்தார். அவர்கள் இருவரும் விடுமுறைக்காக மதுரைக்கு வந்திருந்து, செவ்வாய்கிழமை

கல்லூரிக்கு செல்ல தயாராக இருந்தார்கள். நான் காவல்நிலையத்தில் 19 ஆம் தேதி இருககும் போது வேறு உயரதிகாரிகளும் வந்தார்கள். அவர்கள் யாரென்று எனக்குத் தெரியாது. 16 ஆம் தேதி என்னை போலிசார் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள். அதன்பின்னர் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்துப் பார்க்கப்பட்டு/ சாட்சிக்கு வாசித்துக்காண்பித்து அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்/ கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல்
மாவட்ட நீதிபதி,
மதுரை.

(**CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE**)
**IN THE COURT OF THE I ADDL.DIST. & SESSIONS COURT, MADURAI.**
**DEPOSITION OF WITNESS FOR PROSECUTION / DEFENCE**
**SESSIONS CASE NO.112/2019 P.W - 3**

Name : ஆண்டாள்
Father's name :
Village :
Taluk :
Caste :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 20-09-2021.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது விருதுநகரில் குடியிருக்கிறேன். கடந்த 20 வருடங்களாக விருதுநகரில் குடியிருக்கிறேன். என் அம்மா மாரியம்மாள் மதுரையில் அரசரடி ஹார்வி நகரில் குடியிருந்து வந்தார். இந்த வழக்கில் இறந்து போன மாரியம்மாள் என்னுடைய அம்மா ஆவார். சுமார் 4 வருடங்களுக்கு முன்பு மாலை சுமார் 4.45 மணியளவில் என்சின்னமகன் பாலாஜிக்கு ஒரு போன் வந்தது. என் அம்மா பெட்டில் இருந்து கீழே விழுந்துவிட்டார் என்று தகவல் சொன்னார்கள். நாங்கள் உடனே கிளம்பி வந்தோம். நடுவழியில் என் அம்மாவை யாரோ குத்திவிட்டார்கள் இரத்தத்துடன் இருக்கிறார் என்று சொன்னார்கள். நாங்கள் வீட்டிற்கு வரும் போது போலிஸ் வந்திருந்தார்கள். பார்த்தார்கள். என் அம்மாவை பார்த்தோம். அவர் நகை போட்டிருக்கவில்லை. என்ன போட்டிருந்தார் என்று போலிசார் கேட்டார்கள். நான் செயின், கம்மல், வளையல் போட்டிருந்ததாக சொன்னேன். அதற்கு போலிசார் செயின் மட்டும் இல்லை, மற்றவை உள்ளது என்று சொன்னார்கள். அந்த செயின் 6 பவுன் இருக்கும். அந்த செயினை நீதிமன்றத்தில் இருந்து பெற்றுச் சென்றேன். அது என் தம்பி வீட்டில் உள்ளது. இன்று நான் கொண்டு வரவில்லை. என்னிடம் காட்டப்படுவது மேற்படி செயினின் புகைப்படம் ஆகும். அது **சா.பொ.1** (எதிரி தரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்பட்டது). அன்றைய தேதயில் என்னை

புகார் கொடுக்கச் சொன்னார்கள். என்னிடம் காட்டப்படுவது நான் எழுதிக் கொடுத்த புகார் ஆகும். அதிலுள்ளது என்னுடைய கையெழுத்து. அதில் என் மகன் பாண்டிகணேஷ் சாட்சி கையெழுத்து போட்டுள்ளான். அந்த புகார் **அ.சா.ஆ.**1. இதுசம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தாகர்கள்.

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

அன்றைய தேதியில் நான் விருதுநகரில் இருந்து காரில் என் அம்மா வீட்டிற்கு வந்தேன். அன்று என்னுடன் இளையமகன் பாலாஜி வரவில்லை. என் உடன்பிறந்தவர்கள் இரண்டு தங்கைகள் உள்ளார்கள். ஒரு தம்பி உள்ளார். ஒரு தங்கை மதுரையில் மேலஅனுப்பானடியில் உள்ளார். ஒரு தங்கை சென்னையில் இருந்தார். அவர் இறந்துவிட்டார். என் தம்பி சென்னையில் உள்ளார். என் அம்மா மதுரையில் தனியாக குடியிருந்தார் நான் சுமார் 10 நாட்களுக்கு ஒருமுறை வந்து போவேன். என் அம்மா குடியிருந்த வீடு பெரிய வீடு ஆகும். அது என் அம்மா பெயரில் இருந்தது. அந்த வீட்டில் இரண்டு தனியார் குடோன்களும், மற்றும் எதிரி, சாட்சி விஸ்வா ஆகியார்கள் வாடகைக்கு இருந்தார்கள். மொத்த வாடகை எவ்வளவு வந்தது என்றால் ரூ.2,000 இருக்கும். என் அம்மா இருக்கும் போதுவீட்டை விற்க நாங்கள் முயற்சி செய்யும் போது நான் இருக்கும் வரை விற்கமாட்டேன் என்று என் அம்மா ஆட்சேபணை செய்து புரோக்கர்களை விடமாட்டார் என்றால் சரிதான். என் அம்மா குடியிருந்த வீடு வடக்கு பார்த்த வீடு ஆகும். வடக்கில் இருந்து உள்ள நுழைந்தால் ஒரு ஹால் உள்ளது. அந்த ஹாலுக்கு மேற்குபுறம் இரண்டு படுக்கையறைகள் உள்ளது என்றால் சரிதான். அந்த ஹாலுக்கு தெற்கே வடக்கு பார்த்து பாத்ரூம் உள்ளது என்றால் சரிதான். அந்த ஹாலுக்கு தென்கிழக்கு மூலையில் ஒரு பெரிய சமையலறை உள்ளது. அந்த சமையலறைக்கு தெற்கே ஒரு தனிவழி உள்ளது. அதற்கு ஒரு மரக்கதவும், மற்றும் ஒரு கிரில் கேட்டும் உள்ளது என்றால் சரிதான். என் அம்மா வீட்டிற்கு தெற்கே எலக்ட்ரிக் சப் ஸ்டேசன் உள்ளது என்றால் சரிதான். என் அம்மா

வீட்டிற்கு பின்புறம் சுமார் 12 அடி உயர சுவர் உள்ளது என்றால் சரிதான். என் அம்மா வீட்டில் மேரி என்பவர் என் அம்மாவிற்கு துணையாக வீடு கூட்டுவது, சமையல் செய்வது போன் வேலைகளை செய்து வந்தார் என்றால் சரிதான். மேற்படி மேரி தினம் காலை எட்டு மணிக்கு என் அம்மா வீட்டிற்கு வந்து காலை சாப்பாடு மற்றும் மதிய சாப்பாடு செய்து வைத்துவிட்டு மாலை 3, 3.30 மணியளவில் வீட்டிற்கு செல்வார். அவர் போகும் போது பாத்திரங்களை துலக்கிவிட்டு, பின்வாசல் கதவு, மற்றும் முன்வாசல் கதவுகளை மூடிவிட்டு சாவியை என் அம்மாவிடம் கொடுத்துவிட்டு செல்வார். நான் விருதுநகரில் இருந்து வரும் போது வரும் வழியில் என் அம்மாவிற்கு கழுத்தில் காயம் இருந்த விபரம் தெரியவந்ததாக புகாரிலும், போலிசார் விசாரணையிலும் சொல்லவில்லை. நான் என் அம்மா வீட்டிற்கு வரும் போது கேட்டில் இருந்து வீடு வரை போலிசார் இருந்தார்கள். நான் வந்த பின்னர் போலிசார் என் அம்மா உடம்பில் இருந்த நகைகளை காட்டி இந்த நகைகளா என்று கேட்டார்கள். நான் விருதுநகரில் இருந்து என் அம்மா வீட்டிற்கு வரும் போது சுமார் 6.30 மணியிருக்கும். அப்போது எதிர்வீட்டில் வேலை பார்க்கும் மீனாட்சி, மேரி, எதிரி, அவர் அப்பா இருந்தார்கள். விஸ்வா, மற்றும் அவர் நண்பர்கள், எதிரி, அவர் அப்பா, என்னையும் போலிசார் காவல்நிலையம் வரச்சொன்னார்கள். நான் காவல்நிலையம் செல்லும் போது 9 மணி இருக்கும். அப்போது என்னுடைய மூத்த மகன் பாண்டிகணேஷ் உடன் வந்தார். அனுப்பானடியில் இருந்த என் தங்கையும் வந்திருந்தார். அனுப்பானடியில் இருந்த என் தங்கையின் கணவர் ஒரு வழக்கறிஞர். அவர் காவல்நிலையம் வரவில்லை. காவல்நிலையத்தில் எங்களை தனியாக விசாரித்தார்கள். விஸ்வா மற்றும் அவரது நண்பர்கள், எதிரி, அவர் அப்பாவை தனியாக விசாரித்தார்கள். என்னை விசாரித்துவிட்டு கைப்பட புகார் எழுதி தரச்சொன்னார்கள். நான், என் மகன், மற்றும் என் தங்கை ஆகியோர்கள் கலந்து ஆலோசித்துவிட்டு நான் புகாரை எழுதிக்

கொடுத்தேன். வளையலை என் அம்மா வீட்டில் வைத்து அன்றே போலிசார் கொடுத்துவிட்டார்கள். ஒவ்வொரு செயின் மாடலுக்கும் ஒரு பெயர் உண்டு என்றால் சரிதான். நான் கொடுத்த புகாரிலும், போலிசார்விசாரணையிலும் என் அம்மா அணிந்திருந்த செயினின் மாடலை சொல்லவில்லை. அந்த செயினில் முகப்பும் இருந்தது. பலவகையான முகப்பு மாடல்கள் உள்ளது என்றால் சரிதான். நான் கொடுத்த புகாரில் கல்முகப்பு வைத்த செயின் என்று சொன்னேன். சாட்சி புகாரை பார்த்துவிட்டு முகப்பு வைத்த செயின் என்று கூறியதாக கூறுகிறார். என்னுடைய தகப்பனார் இந்து பத்திரிக்கையில் வேலைபார்த்தவர். என்னுடைய தம்பி Inspector of Factories அக பணிபுரிந்து ஓய்வு பெற்றவர். நான் ஆசிரியையாக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன. என் மூத்தமகன் வேலை பார்த்து ராஜினாமா செய்து விவசாயம் பார்த்து வருகிறார். என்னுடைய இளைய மகன் கால்நடை மருந்துகள் விற்பனை செய்யும் விற்பனை பிரதிநிதியாக இருக்கிறார். என் அம்மா எல்லா நகைகளையும் எப்போதும் போட்டுக் கொண்டிருக்கமாட்டார். என் அம்மா போட்டிருந்த நகைகள் தான் இருந்தது. வேறு நகைகள் இல்லை. என் அம்மா போட்டிருந்த நான்கு வளையல்களின் எடை 6 பவுன் இருக்கும். அவர் கல்தோடு, மாட்டல் போட்டிருந்தார். அந்த கல்தோடு மற்றும் மாட்டலின் எடை சுமார் 3/4 பவுன் இருக்கும். அவர் போட்டிருந்த மோதிரம் மற்றும் கம்மல் 1 பவுன் இருக்கும். என் அம்மா வீட்டில் குடியிருந்த வாடகைதாரர்களின் செல்போன் எண் எனக்குத் தெரியாது. புகாரை இன்ஸ்பெக்டர் மற்றும் என் மகன் கலந்து இப்படி எழுதுங்கள் என்று சொன்னார்கள். நான் எழுதினேன். நான் கொடுத்த புகாரில் என் அம்மா போட்டிருந்த 6 பவுன் செயின் காணவில்லை என்று பொய்யாக

சொல்லியுள்ளேன் என்றும், என் அம்மா அன்றைய தேதியில் 6 பவுன் செயின் போட்டிருக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. 6 பவுன் செயின் போலிசார் சொல்லிக் கொடுத்து வழக்கிற்காக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்துப் பார்க்கப்பட்டு/ சாட்சிக்கு வாசித்துக்காண்பித்து அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்/ கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல்
மாவட்ட நீதிபதி,
மதுரை.